**<u>கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்– 1</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் நீர் வழஙகல்துறை அரசு ஆணை எண் 73 நாள் 19.07.18ன்படியும் மற்றும் அரசு ஆணை எண் 76 நாள் 26.07.18ன் படி நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்பு கட்டிடஙகளுக்கு 50 விழுக்காட்டிற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 விழுக்காட்டிற்கு மிகாமலும் சொத்துவரி 01.04.2018 முதல் சீராய்வு செய்ய உத்திரவிடபபட்டுள்ளது.

மேலும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண் 20555/18/ஆர்1 நாள் 20.08.18ல் தெரிவிக்கப்பட்ள்ள வழிகாட்டுதலின்படி கடையநல்லூர் நகராட்சிக்கு பகுதிகளில் 01 முதல 33 வார்டுகளுக்கு சொத்துவரி சீராய்வு செய்து கீழ்க்கண்டவாறு மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது அதன் விபரத்தினை பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

01. மண்டலம் ஏ ரூ.2.10

02. மண்டலம் பி ரூ.1.20

03. மண்டலம் சி ரூ.0.70

**(ந.க.எண். 3565/2018/அ1)**

**<u>தீர்மானம் எண். 208</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 2</u>**

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண்.73 நாள்.19.07.18ன்படியும் அரசு ஆணை எண்.76 நாள்.26.07.2018ன் படியும் மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.20555/18/ஆர், நாள்.20.08.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி கடையநல்லூர் நகராட்சியில் 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இச்சீராய்வு பணிக்காக நாளேடுகளில் அறிவிக்கை செய்யவும், மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்யவும், தேவையான படிவங்கள் உரிய அச்சகத்தில் அச்சீடு செய்யவும் மற்றும் அவ்வப்போது ஏற்படும் இதரச் செலவினங்கள் உத்தேசமாக ரூ.2.00 லட்சம் ஆகும் என்பதால் அதனை பொது நிதியில் இருந்து செலவிடவும் இப்பணிகளின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று இது சார்பான நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் அங்கீரம் வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 3565/2018/அ1)**

**<u>தீர்மானம் எண். 209</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**தனிஅலுவலர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**